செ.வெ.எண் 771 நாள் 30-11-07

தமிழக அரசால் அரசுப் பணிகளில் காலியாக உள்ள பணியிடங்கள் அனைத்தும் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. போக்குவரத்துத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களும் இதேபோல் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுள் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலையில் காலியாக உள்ள பணியிடங்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் ஆகியோர் அடங்கிய (Apex Committee) உயர்மட்டக் குழு மூலம் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கும் நபர்கள் தேர்வு செய்யப்பட்டு இத்துறையில் தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு வருகின்றனர்.

01.03.2007 அன்று இத்துறையில் 112 தட்டச்சர் மற்றும் 7 சுருக்கெழுத்தர் பணியிடங்கள் காலியாக இருந்தன. அவற்றுள் மேற்கூறிய குழு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு 69 தட்டச்சர் பணியிடங்களும் 5 சுருக்கெழுத்தர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன. இவற்றுள் சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காலியாக இருந்த 40 தட்டச்சர் பணியிடங்கள் மற்றும் 4 சுருக்கெழுத்துத்தட்டச்சர் பணியிடங்களில் இதுவரை 32 தட்டச்சர் பணியிடங்களும் 3 சுருக்கெழுத்துத்தட்டச்சர் பணியிடங்களும் நிரப்பப்பட்டு விட்டன.

இன்று 30.11.2007 மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் போக்குவரத்து ஆணையர் அலுவலகத்தில் மொத்தம் 12 நபர்களுக்கு (11 தட்டச்சர்கள் மற்றும் 1 சுருக்கெழுத்துத் தட்டச்சர்) தற்காலிக பணிநியமன உத்தரவை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் போக்குவரத்துத் துறை ஆணையர் திரு.சி.பி.சிங், இ.ஆ.ப., அவர்களும் மற்றும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். பணி நியமன உத்தரவு பெற்றவர்கள் தங்கள் நன்றியினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கு தெரிவித்துக் கொண்டனர். பணி நியமன உத்தரவு பெற்றவர்களில் சிலர் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து சுமார் 20 ஆண்டுகளாக வேலை வாய்ப்பினைத் தேடி காத்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

போக்குவரத்து ஆணையர்

வெளியீடு, இயக்குநர்.
செய்தி, மக்கள் தொடர்புத் துறை.
தலைமைச் செயலகம், சென்னை-9.